இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 116 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 20 – புதன்கிழமை 06 டிசம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 116 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 20 - Wednesday 06 December 2023 - Dak 8 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (13)

# வரலாறு காட்டும் வானவில் வண்ணங்கள்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

உலக வரலாற்றில் புரட்சியாளர்கள், சாதனையாளர்கள் வரிசையில் இடம் பெற்ற ஒரு சிலரின் வாழ்க்கை வரலாற்றினை வருங்கால இளைஞர் சமுதாயம் தெரிந்துகொண்டு, பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு நாளும் பல புத்தகங்களைப் படித்து அவற்றைச் சுருக்கமாகத் தொகுத்து அளித்து வருகிறேன். அதைப் பாராட்டி, ஒவ்வொரு நாளும் பலர் தொலைபேசி மூலமாகவும், நேரில் சந்திக்கும் போதும், இதனைத் தொடர்ந்து எழுத வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கான நேரம் எனக்கில்லை என்றபோதிலும், நெல்லை இளைஞர் அணி மாநில மாநாட்டினையொட்டி முடிந்த வரை இந்தத் தொடரினை வழங்கும் முயற்சியில் ஈடுபடுகிறேன்.

இந்த வரிசையில் நான் குறிப்பிட்டிருந்தவாறு தத்துவ ஞானி சாக்ரடீஸின் வரலாற்றைத் தொடர்ந்து, அவருடைய மாணவர் பிளேட்டோ எழுதிய நூல்களில் முதன்மையானது “ரிபப்ளிக்” என்பதாகும். சட்ட வரம்புக்கு உட்பட்டு ஒருவர் ஆள்வதை முடியாட்சி (Monorchy) என்றும், சிலர் ஆள்வதை பிரபுக்களாட்சி (Aristocracy) என்றும், பலர் ஆள்வதை மிதமான மக்களாட்சி (Moderate Democracy) என்றும், சட்டத்தைத் துச்சமாக மதித்து யதேச்சாதிகாரமாக ஒருவர் ஆட்சி புரிவதை கொடுங்கோலாட்சி (Tyranny) என்றும், சிலர் ஆள்வதை சுயநலப் பணக்காரர்களாட்சி (Oligarchy) என்றும், பலர் ஆள்வதை மித மிஞ்சிய மக்களாட்சி (Extreme Democracy) என்றும் பிளேட்டோ விளக்கம் அளித்திருப்பது ஒன்றிலிருந்தே அவரது சிந்தனையாற்றலை நாம் தெரிந்து கொள்ளலாம்.

பிளேட்டோவிடம் 17 ஆண்டுகள் கல்வி கற்ற அரிஸ்டாட்டில், கிரேக்க அறிஞர்கள் பட்டியலில் இடம் பெற்றவர்களில் ஒருவர். ஆளுபவருக்கும், போர் வீரர்களுக்கும் பொதுவுடைமையைப் போதித்தவர் பிளேட்டோ. அதற்கு மாறாக, சொந்த சொத்துரிமையும், குடும்ப நிறுவனமும் இயற்கையாக மனிதருக்கு இருக்க வேண்டிய உரிமைகள் என்று வாதாடியவர் அரிஸ்டாட்டில். அரசாங்கம் மாறும் போதெல்லாம் அரசும் மாறுவதில்லை, அரசு என்பது நிலையானதொரு ஸ்தாபனம் என்று முதன் முதலாக இந்த விளக்கத்தை வழங்கியவர் அரிஸ்டாட்டில் தான். பிளேட்டோவின் நூல்களை விட மேலை நாடுகளில் அரிஸ்டாட்டிலின் நூல்கள் தான் பெரிதும் பேசப்பட்டன. அரசியல் நூலின் தந்தை என்றுதான் இன்றளவும் அரிஸ்டாட்டில் போற்றப்படுகிறார்.


மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றம், அரச பயமின்றி, பிரபுக்களின் தலையீடின்றி நடக்கும் தேர்தல்கள், அச்சமின்றி உண்மைகளை உரைக்கத் தயங்காத பத்திரிகைகள், அரசியல் உரிமைகளில் எல்லோருக்கும் சமத்துவம் ஆகிய ஏற்பாடுகளைக் கொண்ட நாட்டில்தான் ஜனநாயகம் செழித்து வளரும் என்ற தத்துவத்திற்குச் சொந்தக்காரர்தான் பேனா முனையால் புரட்சி செய்த வால்டேர். அந்த எழுத்து வேந்தர் இறந்து பத்தாண்டுகளுக்குப் பிறகு தான் பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றது. 14-7-1789 அன்று கிளம்பிய அந்தப் புரட்சிப் படையின் முழக்கம் “வாழ்க வால்டேர்” என்பதுதான். இதிலிருந்தே அவரது பேனா முனையின் வலிமையை உலகம் உணர்ந்திருந்தது எனலாம்.

வால்டேர் என்பது அவர் தனக்குத்தானே சூட்டிக் கொண்ட பெயர். அவருடைய பெற்றோர் வைத்த பெயர் பிரான்சிஸ்மரே அருவே என்பதுதான்.

**கலைஞர் கடிதம்**

அவர் இளைஞராக இருந்தபோது அரசவையின் அன்றாட நிலவரங்களைக் கவனித்து வந்தார். அது 15ஆம் லூயி மன்னனின் காலம். மன்னன் சிறுவனாக இருந்ததால், அவனது பிரதிநிதியாக; ஆர்லியன்ஸ் பிரபு என்பவர் ஆட்சி நிர்வாகத்தை நடத்தி வந்தார்.

மக்களை வாட்டி வதைக்கும் மதக்குருக்கள், பாட்டாளிகளின் வயிற்றில் அடிக்கும் அரசு, இதனை



வால்டேர்

கண்டு உள்ளம் நொந்த இளம் கவிஞரான வால்டேர் உண்மை நிலவரங்களை தன் கவிதையால் சாடினார். இரு பொருள் தரத்தக்க வசனங்களை அவரது நாடகங்களில் அரங்கேற்றினார். ஆட்சி வெகுண்டெழுந்து அடக்குமுறையை வீசியது. வால்டேர் எழுதிய புத்தகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. அவர் அதை உடைத்தெறிந்தார். அதன் காரணமாக, ஆட்சியாளர் ஆர்லியன்ஸ் பிரபுவினால் உடனடியாக அழைக்கப்பட்டார். வால்டேர் நேரில் சென்று சந்தித்தார். அப்போது ஆர்லியன்ஸ் “நீ இதுவரை காணாத ஒன்றைக் காணப் போகிறாய்” என்றார். அது என்னவென்று வால்டேர் கண்களால் கேட்டபோது, “பாஸ்டில் கோட்டை” என்றார் ஆர்லியன்ஸ். பாஸ்டில் கோட்டை என்பது பாரீஸ் நகரிலே உள்ள பயங்கரச் சிறைச் சாலை. அதற்குள் 6-4-1717 அன்று 23 வயதேயுடைய வால்டேர் எந்தவிதமான

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## புயல் - கனமழை காரணமாக துயர் துடைப்புப் பணிகள் மேற்கொள்ள

# உடனே ரூ.5000 கோடி தர வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - செய்தியாளர் பேட்டியில் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 6 -**

**மிக்ஜாம் புயல் காரணமாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் துயர் துடைப்புப் பணிகள் மேற்கொள்ள உடனடியாக ரூ.5000 கோடியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார்,**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு –

வரலாறு காணாத வகையில், பெருமழையானது நேற்றைய தினம் கொட்டி தீர்த்திருக்கிறது. மீனம்பாக்கத்தில் 43 செ.மீ. பெருங்குடி 44 செ.மீ பதிவாகி இருக்கிறது. இதை வைத்தே நீங்கள் முடிவு செய்து கொள்ளலாம். நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் குழு!**

அப்போது பல இடங்களில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு 2021 ஆம் ஆண்டு நவம்பரில் பெருமழை ஏற்பட்டது. அதை மனதில் வைத்துக்கொண்டு தான் அப்போது தேங்கி இருந்த மழை தண்ணீரை கணக்கெடுத்து அந்த அடிப்படையில்தான், சென்னை மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஒட்டு மொத்த மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக நாங்கள் திட்டமிட்டோம். பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்தது. இதற்கென பல்வேறு வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்தோம்.

அந்த குழு ஒரு பெரிய ஆய்வு நடத்தி, அவர்கள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில், சுமார் 4000 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வெள்ளநீர் வடிகால் மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டோம். இந்தப் பணிகள் செய்த காரணத்தினால், தற்போது ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த வரலாறு காணாத வெள்ளத்தை நாம் சந்தித்தபோதும், அதனுடைய தாக்கம் கடந்த காலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெருமளவு குறைந்திருக்கிறது. அதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

**வரலாற்றில் இல்லாத அளவு வெள்ளப் பெருக்கு!**

உதாரணமாக, 2015ஆம் ஆண்டு கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை யாரும் மறந்திருக்கமாட்டீர்கள். அதை ஒப்பிடும்போது, அன்று நுங்கம்பாக்கத்தில் 29.4 சென்டிமீட்டர் மழையும், மீனம்பாக்கத்தில் 34.5 சென்டிமீட்டர் மழையும் 24 மணி நேர கால அளவில் பதிவானது. இதனை ஒப்பிடும் போது, தற்போது வீசியிருக்கக்கூடிய மிக்ஜாம் புயலால் ஏற்பட்டிருக்கக்கூடிய மழை என்பது மிக மிக மிக அதிகம் என்பதை நீங்கள் உணர்வீர்கள். பெருங்குடியில் மட்டும் 44 சென்டிமீட்டர் மழையும்,

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில், கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை. அமைச்சர் கே. என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 06-12-2023

# தேர்தல் முடிவும் படிப்பினைகளும் !

‘அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை’ – என்பது தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று. ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் இப்படித்தான் அமைந்துள்ளது.

★ **மத்தியப் பிரதேசம்**

★ **இராஜஸ்தான்**

★ **தெலுங்கானா**

★ **சட்டீஸ்கர்**

★ **மிசோரம்** – ஆகிய ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளியாகி இருக்கிறது. மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், சட்டீஸ்கர் ஆகிய மூன்று மாநிலங்களையும் பா.ஜ.க. கைப்பற்றி இருக்கிறது. தெலுங்கானா மாநிலத்தை காங்கிரஸ் கட்சி கைப்பற்றி இருக்கிறது. மிசோரம் மாநிலத்தில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகித்த மிசோ தேசிய முன்னணி தோல்வி அடைந்துள்ளது. ஜோரம் மக்கள் இயக்கம் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறது.

மூன்று மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. இரண்டு மாநிலங்களில் தோல்வி அடைந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க. வென்றிருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ.க.வுக்குமான வாக்கு வித்தியாசம் 10 லட்சம் பேர் தான். சட்டீஸ்கரில் 6 லட்சம் வாக்குகள்தான். மத்தியப் பிரதேசத்தில் மட்டும் தான் 35 லட்சம் வாக்குகளை கூடுதலாக பா.ஜ.க. பெற்றுள்ளது.

ராஜஸ்தானில் காங்கிரஸுக்கும் பா.ஜ.க.வுக்கும் 2 விழுக்காடு வாக்குகள் தான் வேறுபாடு. சட்டீஸ்கரில் 4 விழுக்காடு, மத்தியப் பிரதேசத்தில் 8 விழுக்காடு வாக்குகள் வேறுபாடு ஆகும். தெலுங்கானாவில் பா.ஜ.க.வை விட 26 விழுக்காடு அதிகமான வாக்குகளை காங்கிரஸ் பெற்றுள்ளது. தெலுங்கானாவில் பா.ஜ.க. அடைந்த மாபெரும் தோல்வியை மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் அடைந்துவிடவில்லை என்றே சொல்ல வேண்டும்.

பா.ஜ.க.வை தெலுங்கானா நிராகரித்திருக்கிறது. மிசோரமில் பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சியே பா.ஜ.க.வை நிராகரித்தது. அபரிதமான – மகத்தான வெற்றி என்று சொல்லத் தக்க வாக்குகளை பா.ஜ.க. பெறவில்லை.

பொதுவாகவே மாநில சட்டமன்றத் தேர்தல்களில் உள்ளூர் பிரச்சினைகளே முக்கியத்துவம் பெறும். அந்த வகையில் பா.ஜ.க. அடைந்துள்ள மூன்று மாநில வெற்றிகளை, அந்தந்த மாநிலக் களநிலவர வெற்றிகளாகத் தான் பார்க்க வேண்டும். மோடியை பிரதமர் ஆவதற்கான தேர்தல் அல்ல இவை. சொந்த மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சியா, காங்கிரஸ் ஆட்சியா என்பதை முடிவு செய்வதற்கான தேர்தல் இது. இந்த தேர்தல் முடிவுகளை அரசியல் விமர்சகர்கள் பல்வேறு கோணங்களில் விமர்சிக்கிறார்கள்..

★ ‘இந்தியா’ கூட்டணியில் இடம்பெற்றுள்ள சமாஜ்வாதி கட்சியும், ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸும் தனித்தனியாக மத்தியப் பிரதேச மாநிலத்தில் போட்டியிட்டுள்ளன. சமாஜ்வாதியும், ஆம் ஆத்மியும் அரவணைக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டிருக்க வேண்டும். பா.ஜ.க.வுக்கு எதிரான GGP கட்சியும் இக்கூட்டணிக்குள் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். முந்தைய சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கும் காங்கிரசுக்குமான வாக்கு வேறுபாடு 1 விழுக்காடுக்கும் குறைவுதான். சிறிய கட்சிகளை காங்கிரஸ் கட்சியானது தேர்தலுக்கு முன்பே ஒன்றிணைத்திருக்க வேண்டும்.

★ ராஜஸ்தான் மாநிலத்திலும் ஆம் ஆத்மி, சமாஜ்வாதி,இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளை காங்கிரஸ் கட்சி ஒருங்கிணைத்திருக்க வேண்டும்.

★ சட்டீஸ்கர் மாநிலத்திலும் இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ஆம் ஆத்மி ஆகிய கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டது. காங்கிரஸ் கட்சி, இவர்களை ஒன்றிணைத்திருக்க வேண்டும்.அதாவது பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகள், அதனுடைய வாக்குகள் அனைத்தையும் காங்கிரஸ் கட்சி ஒருங்கிணைத்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லி வரும் கூட்டணி வியூகம்தான் வெல்லும் வியூகம் ஆகும். அதனை மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சட்டீஸ்கரில் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இதுவரை அடைந்த அனைத்து வெற்றிக்கும் இதுதான் காரணம். 2019 நாடாளுமன்றத் தேர்தல்,2021 சட்டமன்றத் தேர்தல், இடையில் நடந்த 13 தொகுதி இடைதேர்தல், உள்ளாட்சித் தேர்தல்கள் ஆகிய அனைத்திலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற ஒருங்கிணைந்த கூட்டணியை முதலமைச்சர் அவர்கள் உருவக்கினார்கள். தி.மு.க. கூட்டணி வெற்றிக்கு இந்த ஒற்றுமைதான் அடிப்படைக் காரணம்.

**“பலதரப்பட்ட கட்சிகள் இங்கு இருக்கிறது.அனைத்துமே அகில இந்தியக் கட்சிகள் அல்ல. அதனால் இந்தியா முழுமைக்குமான ஒரே மாதிரியான கூட்டணியை நாம் உருவாக்க முடியாது.எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி செல்வாக்குடன் இருக்கிறதோ அந்தக் கட்சி தலைமையில் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம். தொகுதி பங்கீடுகளைச் செய்து கொள்ளலாம்.மாநில இந்திய ரீதியாகப் பேசுவதை விட மாநில ரீதியாகப் பேசுவது எளிமையாகக் கூட இருக்கலாம் என நினைக்கிறேன்.**

**இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகள் ஒரு மாநிலத்தில் சம விகித செல்வாக்குடன் இருந்தால், அந்த மாநிலங்களில் கூட்டணித் தலைமை என இல்லாமல் தொகுதி பங்கீடு என்ற வகையில் பங்கீடுகளைச் செய்து கொள்ளலாம். ஆனால் பிரிந்து நிற்கக் கூடாது. பா.ஜ.க.வுக்கு எதிரான இரண்டு மதச்சார்பற்ற கட்சிகள் எந்த மாநிலத்திலும் எந்தத் தொகுதியிலும் எதிரெதிராகப் போட்டியிடக் கூடாது.**

**ஒரு கட்சித் தலைமையில் கூட்டணி தொகுதிப் பங்கீடு ஆகியவை செய்ய முடியாத அளவுக்கு இரண்டு கட்சிகளுக்குள் கொள்கை மோதல் இருக்குமானால் பொது வேட்பாளர் என்பதை அறிவிக்க வேண்டும். எங்கும் எந்தச் சூழலிலும் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் அரசியல் இலக்குக்கு எந்தவொரு தொகுதியிலும் இடையூறு ஏற்படக் கூடாது. அதில் கவனமாக இருக்க வேண்டும். நமது அணியில் சேராத ஆனால் பா.ஜ.க.வை கடுமையாக எதிர்க்கும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அவற்றையும் எப்படியாவது கூட்டணிக்குள் கொண்டு வந்துவிட வேண்டும். தேர்தலுக்கு பிறகு கூட்டணி அமைத்துக் கொள்ளலாம் என்பது சரியான நிலைப்பாடாக இருக்க முடியாது. சேர்ந்து போட்டியிட வேண்டும், வெற்றி பெற வேண்டும், ஆட்சி அமைக்க வேண்டும்”** – என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பலமுறை வலியுறுத்தி இருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைத்தான் இந்த மாநிலச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளும் உறுதி செய்துள்ளது.

நடந்தவை மாநில சட்டமன்றத் தேர்தல்கள் தான். நடக்க இருப்பது நாடாளுமன்றத் தேர்தல். மிகுந்த எச்சரிக்கையுடனும், பொறுப்பு உணர்வுடனும் செயல்பட வேண்டிய காலக்கட்டம் இது. பா.ஜ.க. வீழ்த்தப்பட வேண்டும் என்பது ஒன்றே இலக்காக இருக்க வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில், தூய்மைப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டின் பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலிருந்து களப் பணி ஆற்றுவதற்காக வருகை தந்த பணியாளர்களை சந்தித்து, அவர்களை பாராட்டி, பணிகளை செவ்வனே மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் உள்ளனர்.

### ‘மிக்ஜாம்’ புயல் பாதிப்பு: தமிழ்நாட்டிற்கு நிவாரணம் வேண்டும்!

# தமிழ்நாட்டிற்கு முதல்வர் கோரியபடி உடனடியாக நிவாரணம் வழங்கிடுக!

## மக்களவையில் டி.ஆர்.பாலு – மாநிலங்களவையில் திருச்சி சிவா வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 6 –

மிக்ஜாம் புயல் பாதிப்புக்கு தமிழ்நாட்டிற்கு ஐந்தாயிரம் கோடி ரூபாயை ஒன்றிய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர். பாலு வலியுறுத்தியுள்ளார்.





அதேபோன்று மாநிலங்களவையில், தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா உடனடியாக ரூபாய் 5 ஆயிரம் கோடி விடுவிக்க வேண்டி வலியுறுத்தினார்.

மக்களவையில் மிக்ஜாம் புயல் பாதிப்பு குறித்து பேசிய டி.ஆர்.பாலு, புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார். மூன்று நாட்களாக மக்கள் வீடுகளுக்குள் முடங்கியதாகவும், இரவு பகலாக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிற்கு ஏற்கனவே புயல் பாதிப்பு நிவாரணமாக 6 ஆயிரத்து 230 கோடி ரூபாயை ஒன்றிய அரசு இது வரை விடுவிக்கவில்லை என்று குறிப்பிட்ட டி.ஆர்.பாலு, மிக்ஜாம் புயல் பாதிப்புக்கு ஐந்தாயிரம் கோடி ரூபாயை ஒன்றிய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மழை, வெள்ள பாதிப்புகளை பார்வையிட ஒன்றிய அரசு குழுவை அனுப்பி வைக்க வேண்டும் அவர் கோரிக்கை விடுத்தார்.

**மாநிலங்களவை திருச்சி சிவா வலியுறுத்தல்!**

தமிழ்நாட்டின் புயல் பாதிப்பிற்கான நிவாரண நிதியை உடனே வழங்கிடுமாறு மாநிலங்களவையிலும் தி.மு.க. சார்பில் வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பாக மாநிலங்களவையில் பேசிய தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை உள்ளிட்ட ஐந்து மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசினுடைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது என்றும், பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால், பெருமளவு உயிர் சேதம் தடுக்கப்பட்டது என்றும் திருச்சி சிவா கூறினார். அதே சமயம் சாலைகள் சேதம் உள்ளிட்ட பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டபடி புயல் நிவாரண நிதியை உடனே வழங்குமாறு திருச்சி சிவா வலியுறுத்தினார்.

### கடந்த 3 ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகளில் ஈடுபட்ட

# பட்டயக் கணக்காளர் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் கழக உறுப்பினர் வேலூர் கதிர் ஆனந்த் வினா!

புதுடெல்லி, டிச. 6-

நாடு முழுவதும் உள்ள தேசியமயமாக்கப்பட்ட பொதுத் துறை வங்கிகளில் ஒரே நேரத்தில் தணிக்கை, உள் தணிக்கை (Internal Audit) மற்றும் பங்கு தணிக்கை (Stock Audit) செய்யும் பட்டயக் கணக்காளர் நிறுவனங்களின் ஈடுபாடு குறித்தும், கடந்த 3 ஆண்டுகளில் பொதுத் துறை வங்கிகளால் ஈடுபடுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை, ஆண்டு வாரியாக மற்றும் வங்கி வாரியான விவரம் குறித்தும் மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.



கதிர் ஆனந்த் எம்.பி. எழுப்பிய கேள்வி வருமாறு: நாடு முழுவதும் உள்ள தேசியமயமாக்கப்பட்ட பொதுத் துறை வங்கிகளில் ஒரே நேரத்தில் தணிக்கை, உள் தணிக்கை (Internal Audit) மற்றும் பங்கு தணிக்கை (Stock Audit) செய்யும் பட்டயக் கணக்காளர் நிறுவனங்களின் ஈடுபாட்டை அரசாங்கம் குறைத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்.

ரிசர்வ் வங்கி மற்றும் பொதுத்துறை வங்கிகள் ஆண்டுக்கு 40 கோடிக்கும் குறைவான விற்றுமுதல் கொண்ட வங்கிகளுக்கு ஒரே நேரத்தில் தணிக்கை செய்ய வேண்டாம் என முடிவு செய்துள்ளனவா? மற்றும் அப்படியானால், அதன் விவரம் மற்றும்

கடந்த 3 ஆண்டுகளில் பொதுத் துறை வங்கிகளால் ஈடுபடுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை, ஆண்டு வாரியாக மற்றும் வங்கி வாரியான விவரம்.

ஒன்றிய அரசின் நிதி அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் டாக்டர். பகவத் கரத் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம். வருமாறு:-

பொதுத் துறை வங்கிகளில் ஒரே நேரத்தில் தணிக்கை உள் தணிக்கை மற்றும் பங்குத் தணிக்கைகளைச் செய்வதற்கு பட்டயக் கணக்காளர் நிறுவனங்களை அரசாங்கம் ஈடுபடுத்துவதில்லை.

ஒரே நேரத்தில் தணிக்கை செய்வது தொடர்பாக, இந்திய ரிசர்வ் வங்கி (RBI) செப்டம்பர் 18, 2019 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி, வங்கிகள் தங்களுடைய சொந்த வாரியம் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை உள்ளடக்கிய பிரிவுகளை வைத்திருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. ஒரே நேரத்தில் தணிக்கையாளர்கள், வணிகம்/கிளைகளின் கவரேஜ் போன்றவை. அதன்படி, ஒரே நேரத்தில் தணிக்கைக்கு வங்கிகள் தங்கள் சொந்த வாரிய அங்கீகரிக்கப்பட்ட கொள்கையைக் கொண்டுள்ளன.

மேலும், பொதுத் துறை வங்கிகள் (PSBs) உள் மற்றும் பங்குத் தணிக்கையின் நோக்கம் மற்றும் பொருந்தக் கூடிய தன்மை குறித்த தங்கள் சொந்த வாரிய அங்கீகரிக்கப்பட்ட கொள்கையைக் கொண்டுள்ளன.

ரிசர்வ் வங்கி, PSBகளுக்கு ஆண்டுக்கு ரூ.40 கோடிக்கும் குறைவான விற்றுமுதல் கொண்ட வங்கிகளுக்கு ஒரே நேரத்தில் தணிக்கை செய்யக் கூடாது என்று எந்த அறிவுறுத்தலும் வெளியிடப்படவில்லை.

Rbi இலிருந்து பெறப்பட்ட தகவலின்படி, கடந்த 3 ஆண்டுகளில் சட்டப்பூர்வ மத்திய தணிக்கையாளர்கள் (Sca) மற்றும் சட்டப்பூர்வ கிளை தணிக்கையாளர்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள மொத்த பட்டயக் கணக்காளர் நிறுவனங்களின் ஆண்டு வாரியான மற்றும் பி.எஸ்.பி.கள் வாரியான விவரங்கள் தரப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் அமைச்சர் பகவத் கரத் கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட யானைகவுனியில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து, வெள்ள பாதிப்புகள் குறித்து கேட்டறிந்து, தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சூளை கண்ணப்பர் திடலில் உள்ள சமுதாய நலக் கூடத்திற்கு நேரில் சென்று அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உணவு, பாய், போர்வை ஆகியவற்றை வழங்கி, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதியளித்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ‘மிக்ஜாம்’ புயல் காரணமாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

## சீரமைப்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ள உத்தரவு!

**சென்னை, டிச.6-**

**‘மிக்ஜாம்’ புயல் காரணமாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்கிய பின்னர், கடந்த இரண்டு நாட்களாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில், வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள ‘மிக்ஜாம்’ புயல் காரணமாக, தொடர்ந்து பெய்துவரும் வரலாறு காணாத மழையால், தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு நேற்று முன்தினமும் (4.12.2023) நேற்றும் (5.12.2023) பொதுவிடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் மேற்பார்வையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடி நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், சீரமைப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கும், ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரும், தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகளுக்கென தலா ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரும் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் களத்தில் பணியாற்றி வருகின்றனர். அத்துடன் நேற்று கூடுதலாக அமைச்சர் பெருமக்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும் நியமிக்கப்பட்டு களத்தில் பணியாற்றி வருகின்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2023) சென்னை, கல்யாணபுரம் பகுதி மக்களை சந்தித்து, வெள்ள பாதிப்புகள் குறித்து கேட்டறிந்து, தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கண்ணப்பர் திடல்

அதன் தொடர்ச்சியாக, நேற்று (5.12.2023) முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கண்ணப்பர் திடலில் உள்ள சமுதாய நலக் கூடத்திற்கு நேரில் சென்று அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உணவு, பாய், போர்வை ஆகியவற்றை வழங்கி, அவர்களிடம் வசதிகள் குறித்து கேட்டறிந்து, மழைநீரை அகற்றிட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் இயல்புநிலை திரும்பும் என்றும், உங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்து தரும் என்று தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கல்யாணபுரத்தில் உள்ள சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டு, அங்குள்ள மருத்துவர்களிடம் மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரம் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கல்யாணபுரம்

அதனைத் தொடர்ந்து, கல்யாணபுரத்தில் உள்ள சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டு, அங்குள்ள மருத்துவர்களிடம் மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரம் குறித்து முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், அம்முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு, போர்வை, பாய் ஆகியவற்றை வழங்கினார்.

### யானை கவுனி

பின்னர், யானைகவுனியில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து, மழைநீரை அகற்றிட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, யாரும் கவலைப்பட தேவையில்லை என்று தெரிவித்து, அவர்களுக்கு உணவு, போர்வை, பாய் ஆகியவற்றை வழங்கினார்.

### களப்பணியாளர்களுக்கு அறிவுரை

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டின் பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலிருந்து களப் பணி ஆற்றுவதற்காக வருகை தந்தவர்களுடன் கலந்துரையாடி, இக்கட்டான இச்சூழ்நிலையில் பணிகளை மேற்கொள்ள வருகை தந்துள்ள அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து, பணிகளை செவ்வனே மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

> **“பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டின் பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலிருந்து களப் பணி ஆற்றுவதற்காக வருகை தந்தவர்களுடன் கலந்துரையாடி, இக்கட்டான இச்சூழ்நிலையில் பணிகளை மேற்கொள்ள வருகை தந்துள்ள அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து, பணிகளை செவ்வனே மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.”**

தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுவாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் வே.சரவணன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் திருமதி இரா. லலிதா மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (13)

# வரலாறு காட்டும் வானவில் வண்ணங்கள்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

விசாரணையுமின்றி தள்ளப்பட்டார். அவர் சிறையிலே இருந்தபோது எழுதியதையெல்லாம் "வால்டேர்" என்ற பெயரில் எழுதினார். சிறையிலிருந்து வெளி வந்த பிறகு வால்டேர் என்ற பெயரால் அழைக்கப்பட்டு, அப்பெயரே, சரித்திரத்தில் இடம் பெற்றது.

வால்டேர் வரலாற்றில் இதோ ஒரு சம்பவம்! மத துவேஷங்களும், வெறியும் தலைதூக்கி நின்ற அந்தக் காலத்தில் பிராட்டஸ்டண்ட் மதத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் சாலையில் பிணமாகக் கிடந்ததைக் கண்டு, அவன் கத்தோலிக்க மதத்தில் சேர விரும்பினான் என்றும், அதற்காக அவனுடைய கிழத் தந்தையான ஜீன்கலாஸ் என்பவரே தனது மகனைக் கொன்று விட்டார் என்றும், வைதீகக் குருமார்கள் மறைந்தவனின் தந்தை மீதே பழி சுமத்தி, அவரை எதிர் வழக்காட விடாமல் செய்துவிட்டார்கள். ஜீன்கலாஸ் உயிரைப் பலிவாங்கி விட்டார்கள். இந்தக் கொடுமையை அறிந்த வால்டேர், 1763இல் அந்த ஜீன்கலாஸ் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று எண்ணினார். அதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டார். வால்டேரின் முயற்சிக்கு ஆதரவு அளித்த ஆங்கில அரசி, ருஷிய அரசி, சுவிட்சர்லாந்த் நாட்டு மக்கள், பெருநிதி குவித்தனர். வால்டேரின் செல்வாக்கு, விடாமுயற்சி, நா வளம், மக்களின் எழுச்சி நீதி மன்றத்தின் தீர்ப்பையே மாற்றியது. கொல்லப்பட்ட ஜீன்கலாஸ் குற்றமற்றவன் என்று தீர்ப்பு கூறச் செய்தார் வால்டேர். ஜீன்கலாஸ் மறைந்த பிறகும், அவர் மாசற்றவர் என்ற நீதியரசரின் மதிப்புரை, நீதிமன்ற தீர்ப்பாயிற்று.

வால்டேரின் மனித நேயச் சம்பவத்திற்கு ஓர் உதாரணம். இந்தியாவைச் சம்பந்தப்படுத்தும் நிகழ்ச்சியாகவே அதனை எடுத்துக் காட்டுகிறேன். 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவைக் கைப்பற்றுவதில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்டியடிக்கும் முயற்சியில் பிரெஞ்சு நாடு முற்பட்ட போது, பிரெஞ்சு அரசு லாலி என்ற தளபதியை அந்த முயற்சியிலே ஈடுபடுவதற்காக அனுப்பி வைத்தது. லாலி உண்மையான மாவீரன். போர்த் தளபதி. ஆனால், ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றி பெறும் அளவிற்கு படை பலம் அவர்களிடம் இல்லை. அதனால் அந்த முயற்சியில் அவன் வெற்றி பெற முடியவில்லை. எனவே பிரெஞ்சு அரசாங்கம் லாலியின் மீது குற்றம் சுமத்தி, அவனுடைய சொத்துக்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டதோடு, மரண தண்டனையும் விதித்தது. லாலியின் மகன் தன் தந்தைக்கு இழைக்கப்பட்ட அநீதியை வால்டேரிடம் முறையிட்டான். அக்கிரமமாக இவ்வாறு லாலி தண்டிக்கப்பட்டதை, புரட்சியாளர், சிந்தனையாளர் வால்டேரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உடனடியாக பேனாவை எடுத்தார் வால்டேர். லாலிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையெல்லாம் பக்கம் பக்கமாக கட்டுரைகளாகத் தீட்டினார். இறுதியாக, அந்த முயற்சியில் வெற்றி பெற்று லாலியின் மகன் தந்தையின் சொத்துக்களை மீண்டும் பெற்றான். லாலியும் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டார்.

வால்டேரின் குணநலன்களை விளக்கும் மற்றொரு சம்பவம்! ஒருநாள் அவர் வீதிவழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது ஒருவன் இவரை வழி மறித்து கடனாக கொஞ்சம் பொருள் உதவி தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தான். உடனே வால்டேர் கோபமடைந்து, கடன் கேட்பது உனக்கு இழுக்காகத் தெரிய வில்லையா? என்று கேட்டு ஓங்கி அறைந்து விட்டாராம். அதனால் அந்தக் கடன்காரன் மிகவும் வருந்திய நிலையிலே இருந்த போது, அவனுடைய நண்பர் அவனைத் தனியாக அழைத்துச் சென்று இவ்வளவு பெரிய சிந்தனையாளரிடம் நீ அடி வாங்கியதே உனக்கு பெருமையைத் தரக் கூடிய செயல். நீ மிகப் பெரிய பாக்கியவான், இந்தப் பேறு வேறு யாருக்குக் கிடைக்கும் என்று சமாதானம் செய்தானாம். அந்த அளவிற்கு வால்டேரிடம் அடி வாங்குவதுகூட பெருமைக்குரிய செயலாகக் கருதப்பட்டது.

1777ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் வால்டேர் தனது தாயகமான பாரிஸ் நகருக்கு ஒரு மூடு வண்டியில் வந்துகொண்டிருந்தார். இடையில் ஒரு சுங்க அதிகாரி வண்டியை நிறுத்தி, சுங்க வரி விதிக்கப்பட வேண்டிய சரக்கு ஏதாவது வண்டிக்குள் இருக்கிறதா என்று சோதனையிட விரும்பினார். அப்போது அந்த வண்டிக்குள்ளிருந்து ஒரு குரல் "வண்டிக்குள் சட்ட விரோதமான சரக்கு என்னைத் தவிர, வேறு எதுவும் இல்லை" என்றது!. கதவை கோபத்துடன் திறந்து பார்த்த அந்தச் சுங்க அதிகாரி, வண்டிக்குள் அமர்ந்திருந்தது மாமேதை வால்டேர் என்பதை அறிந்து வியந்தார். உணர்ச்சிப் பெருக்கோடு வால்டேரை வரவேற்று, ஊருக்குள் அழைத்துச் சென்றார். பாரிசுக்கு வந்த வால்டேரை மாநகர மக்கள் எல்லாம் தங்கள் ஆனந்த கண்ணீராலும், பாசப் பிணைப்பாலும் திணறச் செய்து விட்டனர்.

பல முறை நாடு கடத்தப்பட்ட காரணத்தால், வால்டேரின் வாழ்க்கையின் பெரும் பகுதி வேற்று நாடுகளில்தான் கழிந்தது. தாயகம் திரும்பிய பிறகு, பாரீஸ் மாநகரில் இளைஞர்களை நோக்கி, "வயதில் சிறியவர்களாகிய நீங்களே பாக்கிய வான்கள், ஏனெனில், நீங்கள் பெரும் பெரும் நிகழ்ச்சிகளைக் காண்பீர்கள்" என்றார். அவர் இவ்வாறு கூறிய 11 ஆண்டுகளுக்குள்தான் அந்த நாட்டில் புரட்சி வெடித்தது. அவர் கூறியது போலவே இளைஞர்கள் புரட்சியை நேரில் கண்டதுமின்றி, அவற்றில் பங்கும் பெற்றார்கள்.

பிரெஞ்சுப் புரட்சியினின்றும், ருஷ்யப் புரட்சியினின்றும் நாம் எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம். இவ்விரு புரட்சிகளுக்கும் சமமான, மக்களுடைய உண்மையான புரட்சிகள்; மக்களின் வாழ்க்கையின் கொடூரமான உண்மைகளின் மீது கோரமான வெளிச்சத்தைச் சொரிகின்றன. விண்ணிலே தோன்றும் மின்னலானது பூமிப் பந்து முழுவதையும் குறிப்பாக அதன் இருண்ட மூலை முடுக்குகளையும் நமக்கு தெளிவாகப் புலப்படுத்துகிறது. அது போல புரட்சியை விதைப்போர், தங்கள் இலட்சியத்தை நோக்கி அம்பைப் போல் விரைகிறார்கள். அவர்கள் எந்தப் பக்கமும் திரும்பிப் பார்ப்பது இல்லை.

17ஆம் நூற்றாண்டில் பேரரசனாக இருந்த 14வது லூயி "அரசாங்கமா? அது நான் தானே?" (I am the State) என்றான். அதற்கு அடுத்த நூற்றாண்டில் பதவிக்கு வந்த 15வது லூயி, "உலகத்தில் பிரளயம் என்ற ஒன்று தோன்றுவதாக இருந்தால் அது எனக்குப் பின் வரட்டும்" என்று கூறினான். ஆனால் உண்மையிலேயே பிரளயம் கிளம்பிய போது, அது மன்னன் 16வது லூயியையும், அவனுடைய அதிகார கும்பலையும் அந்தகாரத்தில் கொண்டுபோய் தள்ளி விட்டது.

"என்னுடைய தொழில் நான் சிந்திப்பதைச் சொல்வது தான்" என்று வால்டேர் சொன்னார். அவர் சிந்தித்ததையெல்லாம் கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், நாடகங்களாகவும், நவீனங்களாகவும், அறிக்கைகளாகவும், கடிதங்களாகவும் வால்டேர் தனது 84 வயது வரை இடைவிடாது அவர் எழுதிய 99 நூல்களில் இடம் பெறச் செய்துள்ளார். அப்படி 84 வயது வரை வாழ்ந்தவரின் சரித்திரத்தைத்தான் இன்று நான், என்னுடைய 84வது வயதில் உங்களுக்காக எழுதிக் கொண்டிருக்கிறேன்.

"பொதுமக்களே, கண் விழித்து புறப்படுங்கள்! உங்கள் கை விலங்குகளை உடைத்து எறியுங்கள்!" என்ற வால்டேரின் சுதந்திரக் குரல் பிரெஞ்சு மக்களைத் தட்டி எழுப்பியது. **"சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்"** என்ற அந்தப் புரட்சியின் புதுமை முழக்கம் உலகம் முழுவதையும் அதிர்ச்சியடையச் செய்தது.

மதவிரோதி என்று மத வெறியர்கள் வால்டேருக்கு பெயர் சூட்டினர். ஏனென்றால், "ஆலயத்தின் நிழலில் அநீதி மன்றம் நடத்தாதே, மூடக் கொள்கைகளை நம்பாதே" என்று அவர் முழக்கமிட்டது தான். வால்டேரை நாத்திகன் என்றும் சிலர் விமர்சித்தார்கள். ஆனால் வால்டேர், "நல்லதொரு கடவுளை நம்பு! நல்லவனாயிரு" என்றுதான் சொன்னார்.

1777ஆம் ஆண்டு தாயகம் திரும்பிய வால்டேரை, அவர் புகழ் பெற்ற பல நாடகங்களை நாட்டுக்குத் தந்தவர் என்ற முறையில் நாடக நடிகர்கள் எல்லாம் இணைந்து மிகப் பெரிய வரவேற்பு ஒன்றினை நல்கிட வேண்டுமென்ற எண்ணத்தோடு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். ஒரு காலத்தில் அந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட அந்தப் பெருமகனுக்கு, அங்கே வாழ்க்கையிலே யாரும் கண்டிராத அளவிற்கு வரவேற்பு நிகழ்ச்சிகள் செய்யப்பட்டிருந்தன. அந்த நிகழ்ச்சிக்கு வால்டேர் வந்தபோது, அவரது திருவுருவச் சிலை ஒன்றினை செய்து வைத்து, அவரது கண்ணுக்கு நேராகவே அதற்கு முடி சூட்டப்பட்டதைக் கண்டு வால்டேர் உள்ளம் நெகிழ்ந்தார். அன்று அந்த மேடையில் அவரது கடைசி நாடகம் அரங்கேற்றப்பட்டது. அதைக் காண வந்திருந்த மக்கள் கூட்டம், பல மணி நேரம் காத்திருந்து வரிசையாக நின்று அவருடைய கைகளை குலுக்கிய வண்ணம் இருந்தார்களாம். இது ஏற்பட்டபோது அவரால் கை கொடுத்து மாளவில்லை. அந்த நிகழ்ச்சி காரணமாகவே அவர் மிகவும் சோர்வடைந்து போய் விட்டார். அதுவே அவர் இறுதி மூச்சு விடுவதற்கு காரணமாக அமைந்தது. சாகும் நிலையில் அந்த மாபெரும் மனிதன் எழுதிய வார்த்தைகள், இன்றளவும் அவரது கொள்கைகளை முழக்கும் முரசங்களாகத் திகழ்கின்றன.

**"நான் நல்ல கடவுளையும் என்னுடைய நண்பர்களையும் போற்றியது போலவே, என் எதிரிகளையும் போற்றினேன். என் எதிரிகள் மீது எந்தவிதமான விருப்பு வெறுப்பும் இல்லாத அளவில், மூட நம்பிக்கைகளை எப்போதும் போல எதிர்த்துக் கொண்டே நான் சாகிறேன்"** இவ்வாறு எழுதி, அதன் கீழே வால்டேர் என்று கையெழுத்திட்டார்.

இத்தனை அறிவுக் கருவூலமானவரும், புதுமை விரும்பியுமான முற்போக்கு சிந்தனையாளர் வால்டேருக்கு சரியான மரியாதை தரப்படவில்லை என்ற குறைபாடு அந்நாட்டு மக்களிடம் இருந்து கொண்டே வந்ததால், அவர் மறைந்த பிறகு மூன்று ஆண்டுகள் ஓடிய நிலையிலும் கூட, 1791ஆம் ஆண்டு, அவரது கல்லறையைத் தோண்டி, உடலினை பாரீஸ் நகரத்திற்குள் மிகப் பெரிய ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். எந்த இடத்தில் வால்டேர் பாஸ்டில் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தாரோ, அதே இடத்தில் அவரது உடல் மரியாதை செலுத்தப்பட்டு, ஓர் இரவு முழுவதும் இறுதி அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த இறுதி யாத்திரைப் பயணத்தில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு சென்று, அவர் உடலை அடக்கம் செய்தார்கள். அந்தக் கல்லறையிலே இன்றளவும் காணப்படும் வாசகம் இரண்டே இரண்டு வார்த்தைகள்தான்! ஆம், **"இதோ வால்டேர்"** என்ற அந்த இரண்டு வார்த்தைகள்தான் அவரின் புகழினை உலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டுள்ளது!

வால்டேர் தனது புரட்சியில் கையில் ஆயுதம் ஏந்தவில்லை. ஆயிரக் கணக்கான படை வீரர்களைக் கொண்டு சேனையை நடத்தி யுத்தம் புரியவில்லை.

**தலையிலே சிந்தனை!**
**கையிலே பேனா!**
**நெஞ்சிலே உறுதி!**

இவைகளையே போர்க் கருவிகளாகக் கொண்டு, 80 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்துப் போர் நடத்திய ஈடு இணையற்ற அந்த சிந்தனையாளர் தன் இரு விழி மூடி இந்தத் தரணியில் உள்ள மாந்தர்தம் விழிகளையெல்லாம் திறந்து வைத்தார் என்பது தான் மறையாத வரலாறு!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 20.11.2007)

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரா (எ) வி.வீரமணி

**டிசம்பர் 6 (2020)**



**கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்டத்தில், பகுதிப் பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## நெல்லை கிழக்கு மாவட்டம்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்: சிலம்பம் - விளையாட்டுப் போட்டிகள்!

### இரா.ஆவுடையப்பன் பரிசுகளை வழங்கினார்!

நெல்லை, டிச.6 -

கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை இரா.ஆவுடையப்பன் வழங்கினார்.

இது பற்றிய விவரம் வருமாறு :-

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக பிரமுகர் சமூக சேவகர் விஜயாபதி ஏ.ஆர்.ரகுமான் ஏற்பாட்டில் சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் வழங்கினார்.

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில் கழக பிரமுகர்சமூக சேவகர் விஜியாபதி ஏ.ஆர்.ரகுமான் ஏற்பாட்டில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வு நெல்லை பாராளுமன்ற உறுப்பினர் சா. ஞான திரவியம் முன்னிலையில் நடைபெற்றது

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் மற்றும் பரிசுகளை வழங்கினார்

இந்நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் ம.கிரகாம் பெல், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் நம்பி, மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணன், எட்வின் வளன்அரசு, ஒன்றிய செயலாளர்கள் செல்வ கருணாநிதி, சுடலைக் கண்ணு, பேரூர் செயலாளர்கள் சேதுராமலிங்கம், தமிழ் வாணன், ஜான்கென்னடி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர்,

விவசாய அணி மாடசாமி, தொண்டர் அணி முருகன்,துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், மனோஜ் குமார், தில்லை ராஜா, அருள்ராஜ் டார்வின், உள்பட சார்பு அணி நிர்வாகிகள், வள்ளியூர் வடக்கு, தெற்கு, வள்ளியூர், பணகுடி, பேரூர் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம். தண்டபாணி

**டிசம்பர் 6 (2012)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**தென்சென்னை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும், மயிலைப் பகுதி துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**முரசொலி நாளிதழின் செய்தியாளராகவும் – மருந்தீஸ்வரர் கோவில் அறங்காவலராகவும் இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் பெரும் இழப்பு தவிர்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி ... முதல் பக்கத் தொடர்ச்சி

மீனம்பாக்கத்தில் 43 சென்டிமீட்டர் மழையும் 36 மணி நேரத்தில் பதிவாகியுள்ளது. இது மிக மிக அதிக அளவாகும்.

மிக்ஜாம் புயலானது விரைவாக கடந்து செல்லாமல், நின்று மழை பெய்த காரணத்தினால், இரண்டு நாட்கள் சென்னையில் பெருமழை ஏற்பட்டது. அதனால்தான் சென்னையில் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் இழப்பு குறைந்துள்ளது!**

இத்தகைய ஒரு மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும், இந்த அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக, உடனடி நிவாரணப் பணிகள் மூலமாக உயிரிழப்புகளும், மற்ற பிரச்சனைகளும் பெருமளவு குறைக்கப்பட்டிருக்கிறது.

சொல்லப்போனால் 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 199 பேர் இறந்திருக்கிறார்கள். ஆனால், இன்று அதைவிட அதிகமான மழை பெய்திருக்கக்கூடிய நேரத்தில் 7 பேர் மட்டுமே இறந்திருக்கிறார்கள். இதுவும் ஏற்பட்டிருக்கக்கூடாது. ஆனால் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அதில் குறிப்பாக, செங்கல்பட்டில், ஒரு சுவர் இடிந்து அங்கே சிலர் இறந்திருக்கிறார்கள். அடுத்து, குருநானக் கல்லூரி அருகே நடந்த விபத்து. அதுவும் உங்களுக்கு தெரியும். அதனுடைய முழு விபரம் வரவில்லை. வந்த பிறகு நாங்கள் சொல்கிறோம்.

**நதிகளின் முகத்துவாரங்களில் அலைகளின் அளவு அதிகம்!**

தற்போது 9 மாவட்டங்களில், 61,666 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 11 இலட்சம் உணவு பொட்டலங்கள் இதுவரைக்கும் வழங்கியிருக்கிறோம். அவர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. காலையிலிருந்து 1 இலட்சம் பால் பாக்கெட் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. தேவையான அத்தியாவசியமான பொருட்களும் வந்திருக்கிறது.

மழைநீர் வடிகால்கள் நல்ல முறையில் பணி செய்தாலும், அவை இறுதியாக கடலில் வடியக்கூடிய அடையாறு மற்றும் கூவம் நதிகளின் முகத்துவாரங்களில் புயலின் காரணமாக அலைகளின் அளவு அதிகமாக இருந்த காரணத்தினால், இந்த நதிகளில் வெள்ள நீர் மிக மெல்லமாகவே வடிந்தது. இருந்தாலும், அரசு மேற்கொண்ட பல்வேறு வெள்ள நிவாரணப் பணிகளால் இச்சூழ்நிலையிலிருந்து பெருமழையின் தாக்கம் குறைக்கப்பட்டிருக்கிறது, வெள்ள நீரும் விரைவாக வடிந்து வந்து கொண்டிருக்கிறது.

அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட நான் விரும்புகின்றேன். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நாம் எப்படியெல்லாம் எடுத்திருக்கிறோம் என்பதற்கு விளக்கம் சொல்வதற்கு நான் விரும்புகின்றேன். 2015ஆம் ஆண்டில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திட்டமிடப்படாமல், அடையாறு வரும்போது, 1 இலட்சம் கன அடி அளவிற்கு பெருமளவு நீர் திடீரென திறந்து விடப்பட்டது. வெள்ளம் ஏற்பட்டதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அது ஒரு செயற்கை வெள்ளம். இது இயற்கையாக ஏற்பட்டிருக்கக்கூடிய வெள்ளம். அதையும், இதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக, கடந்த நான்கு நாட்களில் செம்பரம்பாக்கத்தில் இருந்த நீர் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு திறந்து விடப்பட்ட காரணத்தினால், இத்தகைய பெருமழையின் போது ஓரளவிற்கு சமாளித்திருக்கிறோம். இத்தகைய பெருமழையின் போதும் அதிகபட்சம் 8000 கன அடி அளவிற்கு மட்டுமே நீர் திறந்து விடப்பட்டது. இதனால், சென்னையில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளம் அடையாறு நதியில் தடையின்றி சென்று கடலில் சேர முடிந்தது.

**இன்னல்களின் தாக்கத்தை குறைப்பதே அரசின் கடமை!**

இவ்வாறு நாம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளுக்கு பின்னரும், ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையால் சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு இன்னல்களை பற்றி நான் கேட்டறிந்தேன். நேரிலும் தற்போது நான் பார்த்தேன். இத்தகைய பெரும் இயற்கைச் சீற்றங்களால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாக நேரிட்டாலும், ஒரு அரசின் உண்மையான கடமை என்பது, இந்த இன்னல்களின் தாக்கத்தைக் குறைப்பதோடு, இந்த இன்னல்களில் இருந்து மக்கள் உடனடியாக வெளிவர தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதே ஆகும். இந்த வகையில், நேற்று மழை நிற்பதற்கு முன்பாகவே, தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சி பகுதிகளில் இருந்தும், தூய்மைப் பணியாளர்கள் உட்பட பல்வேறு பணியாளர்கள் திரட்டப்பட்டு சென்னை வந்தடைந்துள்ளனர்.

### செயற்கை பேரிடரும், இயற்கை பேரிடரும்!

அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட நான் விரும்புகின்றேன். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நாம் எப்படியெல்லாம் எடுத்திருக்கிறோம் என்பதற்கு விளக்கம் சொல்வதற்கு நான் விரும்புகின்றேன். 2015ஆம் ஆண்டில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திட்டமிடப்படாமல், அடையாறு வரும்போது, 1 இலட்சம் கன அடி அளவிற்கு பெருமளவு நீர் திடீரென திறந்து விடப்பட்டது. வெள்ளம் ஏற்பட்டதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அது ஒரு செயற்கை வெள்ளம். இது இயற்கையாக ஏற்பட்டிருக்கக்கூடிய வெள்ளம். அதையும், இதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

நீங்களே இவர்கள் வெளியில் நிற்பதை பார்த்திருப்பீர்கள். இவர்கள் அனைவரும் சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சி பணியாளர்களோடு இணைந்து ஏற்கனவே பணியாற்றி கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில பேர் வருகை தந்து பணியாற்ற இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் உங்களிடத்தில் விளக்கமாக சொல்வார்கள். இப்பகுதிகளில் இயல்பு நிலையை விரைவில் திரும்பச் செய்வதற்கான அனைத்து பணிகளையும், முனைப்போடு மேற்கொண்டு வருகிறார்கள்.

**14 அமைச்சர்கள் களத்தில் பணியாற்றினர்!**

இப்பணிகளை ஒருங்கிணைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவரும் மேற்கொண்டு வரும் இந்த முயற்சிகளின் விளைவாக, சென்னை மாநகராட்சி மற்றும் அதன் சுற்றியுள்ள இடங்களில், பல பகுதிகளில் இயல்பு நிலை திரும்ப தொடங்கியுள்ளது. 14 அமைச்சர்கள் களத்தில் இருந்து பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் இதற்காக நியமிக்கப்பட்டு அவர்களும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

4000 கோடி ரூபாயில் பணிகள் செய்தும், சென்னை மிதக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் இதை ஒரு பெரிய குற்றமாக சொல்லிக்கொண்டிருக்கிறார். நான் சொல்கின்ற ஒரே பதில் என்னவென்றால், இதை நான் அரசியலாக்க விரும்பவில்லை. இருந்தாலும், அவர் தொடர்ந்து இதை சொல்லிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, 4000 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்ற காரணத்தினால்தான், இவ்வளவு பெரிய வரலாறு காணாத 47 வருடமாக பார்க்காத மழையை இன்றைக்கு பார்த்திருக்கின்றோம். அதிலிருந்து இன்றைக்கு சென்னை தப்பி இருக்கிறது என்று சொன்னால், 4000 கோடியை திட்டமிட்டு செலவு செய்து அந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்றிய காரணத்தினால்தான். அதை புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் காலத்தில் எதுவும் செய்யவில்லை. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டு காலத்தில் இதை செய்து முடித்திருக்கிறோம் என்பதை நான் உங்களிடத்தில் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**செய்தியாளர் :-** வரலாறு காணாத அளவிற்கு மழை பெய்திருக்கிறது. ஒன்றிய அரசிடம் ஏதாவது உதவி கோரப்படுமா....

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :-** வரலாறு காணாத மழையின் காரணமாக வெள்ள சேதம் ஏற்பட்டிருக்கிறது. குடியிருப்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது. சாலைகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு பணிகள் இருக்கிறது. அதனால் ஒன்றிய அரசிடம் 5000 கோடி ரூபாய் உடனடியாக ஒதுக்கவேண்டும் என்று கடிதம் இன்றைக்கு எழுதப் போகிறோம். இது குறித்து இன்றைக்கு நாடாளுமன்றத்தில், திமுக உறுப்பினர்களும் பேச இருக்கிறார்கள்.

**செய்தியாளர் :-** இன்னும் சில இடங்களில் மின் இணைப்பு கொடுக்காப்படாமல் இருப்பது குறித்து....

**மு.க.ஸ்டாலின் :-** இதுவரை மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதில் 75 சதவீத இடங்களில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 25 சதவீதம் மீதம் இருக்கிறது. அதுவும் ஏன் என்றால், வெள்ளம் சூழ்ந்திருக்கின்ற காரணத்தினால், சில இடங்களில் மின்சாரக் கம்பங்கள் விழுந்திருக்கிறது. அதற்காகதான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் இணைப்பு கொடுக்காமல் இருக்கிறோம். அதையும் இன்று அல்லது நாளைக்குள் அதுவும் சரிசெய்யப்பட்டுவிடும்.

**செய்தியாளர் :-** நிறைய இடங்களில் மாநகராட்சி ஊழியர்களே போய் சேர முடியவில்லை. அதற்கு என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மு.க.ஸ்டாலின் :-** சுருக்கமாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த கால ஆட்சியில் 2015ஆம் ஆண்டு வெள்ளம் ஏற்பட்டு எவ்வாறு பாதிப்பு ஏற்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது நிவாரணப் பணிகள் எல்லாம் 4 நாட்கள் கழித்துதான் நடந்தது. ஆனால் இன்றைக்கு இந்த ஆட்சியில், நேற்றே இந்தப் பணிகள் எல்லாம் தொடங்கப்பட்டு விட்டது. இன்றைக்கு full strengthல் தொடங்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு, அதிகமாக, இன்னும் ஒரு வாரத்திற்குள் எல்லாவற்றையும் rectify செய்ய வேண்டும் என்ற காரணத்தினால், ஒவ்வொரு பகுதிகளிலும் அமைச்சர்கள், அதிகாரிகளை நியமித்து அந்தப் பணிகளை எல்லாம் கணக்கெடுத்து, உடனடியாக செய்யப் போகிறோம்.

**செய்தியாளர் :-** பாதிக்கப்பட்டப் பகுதிகளில் முழுமையான கணக்கெடுப்பு பணிகள் தொடங்கப்பட்டுவிட்டதா?

**மு.க.ஸ்டாலின் :-** ஓரளவு தொடங்கிவிட்டோம். அது பற்றி பிரச்சனையில்லை.

**செய்தியாளர் :-** நிவாரணப் உதவிகள் குறித்து

**மு.க.ஸ்டாலின் :-** ஒன்றிய அரசிடம் நிதியை கேட்டிருக்கிறோம். என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம். பார்த்துவிட்டு, நம்முடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து, என்ன செய்யமுடியுமோ அதை செய்வோம்.

**செய்தியாளர் :-** மருத்துவ முகாம்கள் குறித்து..

**மு.க.ஸ்டாலின் :-** மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் கூடுதல் இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

**செய்தியாளர் :-** சென்னை மாநகராட்சியிலில் மிகுந்த சவாலாக இருக்கும் இடங்கள் குறித்து...

**மு.க.ஸ்டாலின் :-** இந்த மழையே பெரிய சவால்தான். அதனால் எல்லா இடத்திற்கும் சென்று விட்டோம்.

**செய்தியாளர் :-** கடைசியாக, மக்களிடத்தில் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**மு.க.ஸ்டாலின் :-** மக்கள் நல்ல ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் முன்கூட்டியே சொல்லி, எச்சரிக்கை விடுத்திருக்கிறோம். இதைத் தொடர்ந்து, இன்னும் நான்கைந்து நாட்கள் பொறுத்திருந்தால், நிச்சயமாக முழு நிவாரணங்களும் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் அரசு செய்து தரும்.

**செய்தியாளர் :-** பால் கிடைக்கவில்லை என்பது பற்றி.

**மு.க.ஸ்டாலின் :-** இன்று காலை முதல் கொடுக்க ஆரம்பித்துவிட்டோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.

# பவர் ஸ்டார் பவன் கல்யாண் கட்சி டெப்பாசிட்டை பறிகொடுத்தது!



தெலுங்கானா மாநிலத் தேர்தலில் நடிகர் பவன் கல்யாண் கட்சி போட்டியிட்ட ஏழு தொகுதிகளில் 6 தொகுதிகளில் ‘டெப்பாசிட்’ தொகையை இழந்து மிகமிகப் பரிதாபமான தோல்வியை சந்தித்துள்ளது. தெலுங்கானாவில் பவர் ஸ்டார் என அவரது ரசிகர்களால் கொண்டாடப்படுபவர் பவன் கல்யாண்!

இவரது கட்சியான ஜனசேனா கட்சி பா.ஜ.க. வோடு கூட்டணி சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டது. இக்கட்சி சார்பில் எட்டு தொகுதிகளில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். இதில் ஏழு தொகுதிகளில் பவன் கல்யாண் கட்சி சார்பில் நின்ற வேட்பாளர்கள் தங்களது ‘டெப்பாசிட்டை’ பறிகொடுத்துள்ளனர்!

**தெலுங்கானா தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பவன் கல்யாண் பங்கேற்று பாரதிய ஜனதாவுக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் பிரச்சாரம் செய்தார். பாரதிய ஜனதா தான் ஆட்சியைப் பிடிக்கும் என்று பிரச்சாரக் கூட்டங்களில் அடித்துப் பேசினார்! பேசிய கூட்டங்களில் எல்லாம் அலைமோதியது கூட்டம்! இருந்தும் தேர்தல் முடிவுகள், டெப்பாசிட்டைப் பறிகொடுக்குமளவிற்கு அமைந்துவிட்டது”!**

7 தொகுதிகளில் டெப்பாசிட் இழந்து 8வது தொகுதியிலும் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது! பா.ஜ.க.வுடன் இணைந்து நின்ற இந்தக் கட்சி ஒரு தொகுதியைத் தவிர மற்ற தொகுதிகளில் அதன் வேட்பாளர்கள் 5000 வாக்குகள் கூட பெற இயலவில்லை! தேர்தல் பிரச்சார கூட்டங்களில் அவர் பேச்சை கேட்கத் திரண்டிருந்த கூட்டம் பல்லாயிரக்கணக்கானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நான்கு மாநில சட்டமன்றத் தேர்தல்: அனைத்துப் பிரிவு மக்களுக்கும் -

# வளமும், வளர்ச்சியும் அளிப்பதாக ஆட்சிக்காலம் அமையட்டும்!

## வெற்றி பெற்ற கட்சிகளுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, டிச.6–

நான்கு மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், “அனைத்து பிரிவு மக்களுக்கும் நல்ல வளர்ச்சியும், வளமும் அளிப்பதாக ஆட்சிக்காலம் அமையட்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:–

தெலங்கானா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ள கட்சிகளுக்கு எனது வாழ்த்துகள்.

அவர்களது ஆட்சிக்காலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் நல்ல மாற்றத்தையும், வளர்ச்சியையும் வளத்தையும் அளிப்பதாக அமைய விழைகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்திற்குப் புறம்பான “செல்ஃபி பாயிண்ட்” சுற்றறிக்கை:

# பல்கலைக் கழக மானியக் குழு திரும்பப் பெற வேண்டும்!

### பொதுப்பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு கண்டனம்!

சென்னை, டிச.6-

சட்டத்திற்குப் புறம்பான செல்ஃபி பாயிண்ட் சுற்றறிக்கையை பல்கலைக் கழக மானியக் குழு திரும்பப்பெற வேண்டும் என பொதுப் பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச்செயலாளர் பு.பா. கஜேந்திரபாபு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் செல்வாக்கைப் பெருக்கவும், தனி நபர் துதிபாடவும் பல்கலைக்கழக வளாகங்கள் பயன்படக் கூடாது.

டிசம்பர் 1, 2023 தேதியிட்ட பல்கலைக்கழக மானியக் குழு சுற்றறிக்கை பல்கலைக்கழக வளாகங்களில் சுய புகைப்படம் (Selfie Point) எடுத்துக் கொள்ளும் அமைப்பை ஏற்படுத்தக் கோரியுள்ளது.


இந்தியாவின் சமீபத்திய சாதனைகளை (achievements in the recent past) விளக்கி, ஏற்பு அளிக்கப்பட்ட வடிவங்களில் (as per approved designs) மட்டுமே இந்த “செல்ஃபி பாயிண்ட்” அமைக்க வேண்டும் என்ற “கட்டளை” உள்ளடக்கியதாக பல்கலைக்கழக மானியக் குழு சுற்றறிக்கை அமைந்துள்ளது.

அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் காட்சிப்படுத்தும் ஏற்பாட்டை பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பும் அதிகாரம் எந்தச் சட்டத்தாலும் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு வழங்கப்படவில்லை.

சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டிய பல்கலைக்கழக மானியக் குழு, சட்டத்திற்குப் புறம்பாக, தனது எல்லைகளைக் கடந்து, ஒன்றிய அரசின் ஆட்சி பொறுப்பில் உள்ள கட்சியின் பரப்புரைப் பணிகளை மேற்கொள்ளும் அமைப்பாக செயல்படுவது மிகவும் ஆபத்தானது.

சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்ற இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களை உயர்த்திப் பிடித்து, மக்களிடம் இறுதி இறையாண்மை என்ற கோட்பாட்டைக் கொண்ட சமயச்சார்பற்ற ஜனநாயக குடியரசாக இந்தியா இருக்கும் என்பதை அனைவருக்கும் உணர்ந்திடும் வகையில் பல்கலைக்கழக செயல்பாடுகள் அமைவது மட்டுமே பல்கலைக்கழக அமைப்பின் நோக்கம் முழுமையாக நிறைவேற உதவும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.






குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மிக்ஜாம் புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, அரவிந்த் ரமேஷ், மேயர் வசந்தகுமாரி, மாநகராட்சி கண்காணிப்பு அலுவலர் ஆ.ஜான்லூயிஸ், மண்டல குழுத்தலைவர்கள் வே.கருணாநிதி, எஸ்.இந்திரன், து.காமராஜ், மாநகராட்சி ஆணையாளர் ஆர்.அழகுமீனா, தாம்பரம் மாநகர காவல் துணை ஆணையாளர் பவன்குமார் ரெட்டி, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த்குமார் சிங், மண்டல குழு தலைவர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தில் நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமசந்திரன், இயக்குனர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# புதுடெல்லியில் இன்று "இந்தியா" கூட்டணி கூட்டம்!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவிப்பு!

புதுடெல்லி, டிச.6-

பீகார் தலைநகர் பாட்னாவில் கடந்த ஜூன் மாதம் காங்கிரஸ், திமுக, ஐக்கிய ஜனதாதளம், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 20க்கும் மேற்பட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் ஜூலை 17 மற்றும் 18ம் தேதிகளில் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர்களின் 2வது கூட்டம் பெங்களூருவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், Indian National Developmental Inclusive Alliance என்பதன் சுருக்கமாக INDIA என இக்கூட்டணிக்கு பெயர் சூட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மும்பையில் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 28 கட்சிகள் பங்கேற்றன. இந்தியா கூட்டணியை ஒருங்கிணைக்க 13 பேர் கொண்ட ஒருங்கிணைப்பு குழுவும், பிரச்சாரம், சமூக ஊடகம் உள்ளிட்ட குழுக்களும் இக்கூட்டத்தில் அமைக்கப்பட்டன.

இந்நிலையில், இந்தியா கூட்டணியின் அடுத்த கூட்டம் இன்று (டிசம்பர் 6ம் தேதி) மாலை 6 மணியளவில் டெல்லியில் நடைபெறும் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவித்துள்ளார். இதுதொடர்பாக 'இந்தியா' கூட்டணி தலைவர்களுக்கு கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

### மாவட்டப் பொருளாளர் பா.நரேஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# வேப்பம்பட்டில் 46 பேர் உடல் உறுப்பு தானம் வழங்கும் நிகழ்ச்சி!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், டிச. 6 -

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் 46-வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் ஏற்பாட்டில் 46 நபர்கள் உடல் உறுப்பு தானம் வழங்கும் விழா நடைபெற்றது இதில் ஒன்றிய செயலாளர் சே. பிரேம்ஆனந்த் முன்னிலை வகித்தனர்.

இந்த விழாவிற்கு முன்னாள் அமைச்சரும், மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி உடல் உறுப்பு தானம் செய்த 3 பெண்கள் உள்பட 46 கொடையாளிகளுக்கு அரசு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

உடல் உறுப்பு தானம் என்பது சாதாரண விஷயம் அல்ல. அரசியல் கட்சித் தலைவர்கள், முக்கிய பிரமுகர்களுக்கு மட்டுமே அவர்கள் உயிரிழந்த பிறகு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படுவார்கள்.

ஆனால் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்ய தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது. எனவே உடல் உறுப்பு தானம் வழங்கியவர்களின் பாதங்களை பணிந்து எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில, மாவட்ட நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, ம.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மாநகர, ஒன்றிய, பகுதி செயலாளர்கள் சன்பிரகாஷ், டி.தேசிங்கு, பேபி சேகர், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கே. சுரேஷ்குமார், ஒன்றிய நிர்வாகிகள் க.ஜெயராமன், ஞா.ரமேஷ், மு.ராஜா, பா.மகேஸ்வரி பாலவிநாயகம், ஏ.குட்டி (எ) பக்தவச்சலு, இ.என்.சேகர், ஆர். திலீப்ராஜ், ப.இம்மானுவேல், வி.தியாகராஜன், பெ.வினோத், ஜி.சி.சி.கருணாநிதி, விஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், கெஜலட்சுமி, பாஸ்முருகன், சரவணமூர்த்தி, பி. அன்பு, வி.உதயகுமார், ராஜேஷ், சரவணன், ராஜீ, ஸ்ரீதர், கே.ஜெயபால், தாஸ், மணிகண்டன், ஜீவா, நவீன்குமார், மணிவண்ணன், தாஸ், பத்மநாபன், அரவிந்த், செல்வகுமார், டிங்கு, அஜீத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உலக மாற்றுத்திறனாளிகள் தினவிழாவை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் 03.12.2023 அன்று நடைபெற்ற விழாவில் 292 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 67 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், சிறப்பாக சேவையாற்றிய தொண்டு நிறுவனங்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களையும், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பு அளித்த நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், பல்வேறு விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ்களையும் வழங்கி விழாப்பேருரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சந்திரமோகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! சிதம்பரம் ந.தியாகராஜன் முன்னிலை! உளுந்தூர்பேட்டை மு.நசீர் அகமது ஏற்பாடு!

# குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் கிரிக்கெட் போட்டி!

## காணொலி மூலம் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி. தொடங்கி வைத்தனர்!

குவைத், டிச. 6 -

குவைத் குவைத் நாட்டில் தி.மு.கழக அயலக அணி - குவைத் மண்டலத்தில் இளைஞர் அணி சார்பில் தி.மு.கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியினை தமிழகத்தில் இருந்து கழக அயலக அணி தலைவரும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி, கழக அயலக அணியின் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான புதுக் கோட்டை எம்.எம். அப்துல்லா ஆகியோர் காணொலி மூலம் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

இந்த போட்டிகளை தி.மு.க அயலக அணி குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராசன் முன்னிலையில் மண்டல இளைஞர் அணி செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நசீர் அகமது ஏற்பாடு செய்திருந்தார்.

அமைப்பின் மருத்துவ அணி துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன், அமைப் பின் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் பரங்கிப் பேட்டை மு.நசுருதீன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

அயலக தி.மு.க. குவைத் நிர்வாகிகள் - செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது, இணைச் செயலாளர்கள் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, முனசந்தை சிக்கந்தர், துணைச் செயலாளர் ஆயங்குடி சையது முஸ்தபா, துணைப் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி, பொறியாளர் அணி செயலாளர் முத்துப்பேட்டை ம.சபரிவாசன், மக்கள் தொடர்பு செயலாளர் கறம்பக்குடி ஜாபர் சாதிக், கிழக்கு மண்டல அமைப்பாளர் குடந்தை சி.தியாகராஜன் இளைஞர் அணி துணைச் செயலாளர் தக்கலை ஜோசப் பெர்லின், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் புதுகை கனி, மக்கள் தொடர்பு துணைச் செயலாளர் குமரி ஜோசப் எடிசன் ஆகியோர் போட்டிகளை நடத்தி முடித்தனர்.

இந்த 20 ஓவர் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், டெசர்ட் நைட்ஸ், ஜி4, கே.ஒய்.எஃப்.சி.சி, லங்கா ராபியன்ஸ், மொஹபுலா கிங்ஸ், ராயல் ஸ்டார்ஸ் குவைத், தமிழ் ஃபயர் போர்ட்ஸ் ஆகிய எட்டு அணிகளின் வீரர்கள் கலந்து கொண்டு விளையாடினர்.

இதில் ராயல் ஸ்டார்ஸ் குவைத் அணி அனைத்து போட்டிகளிலும் வென்று முதல் பரிசை தட்டிச் சென்றது. சென்னை சூப்பர் கிங்ஸ் குவைத் அணி இரண்டாம் பரிசை வென்றது.

அன்று மாலை அரங்கத்தில் நடைபெற்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு நினைவுக் கோப்பை மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன .

இளைஞரணி செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நசீர் அகமது தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தி.மு.க. அயலக அணி பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன், பொருளாளர் பத்தமடை சிந்தா பக்கீர், இணைச் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலில் முஸ்தபா, துணை செயலாளர்கள் ஆயங்குடி சையது முஸ்தபா பத்தமடை கே.என்.கே. நாகூர், துணைப் பொருளாளர் புதுவை அறிவு மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் நிர்வாகிகள் முத்துப்பேட்டை ம.சபரிவாசன், குடந்தை சி.தியாகராஜன், புதுவை சபீக் கான், உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன், திருவாரூர் திருவரங்கன், அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், திட்டச்சேரி சாகுல் ஹமீது, புது ஆத்தூர் சாகுல் ஹமீது, பரங்கிப்பேட்டை மு.நசுருதீன், குடந்தை ஆர். முருகன், கொளத்தூர் கணேஷ், களந்தை மீரான், பத்தமடை பாய்ஞ்சி பீர் முகமது, குமரி ஜோசப் எடிசன், புதுகை கனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக அமைப்பின் இளைஞரணி துணைச் செயலாளர் தக்கலை ஜோசப் பெர்லின் நன்றி கூறினார்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை தொகுதி க்கு உட்பட்ட மின்வாரியத்தின் சமாதானபுரம் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கோட்டூர் செல்லும் சாலையில் ரூபாய் 5.57 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய மின்மாற்றியை மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.துவக்கி வைத்தார்.நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ்,வழக்கறிஞர் தினேஷ்,மாமன்ற உறுப்பினர்கள், சுப்புலட்சுமி பேச்சியம்மாள்,நகர்ப்புற கோட்ட பொறியாளர் காளிதாசன், அக்ரோ கூட்டுறவு சங்க தலைவர் சுப்ரீத் சுப்பிரமணியன், மனோகரன்,பாபுகுமார்,அரசன் ராஜ்,குணா,முத்துகிருஷ்ணன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


கண்ணீர் அஞ்சலி





'கலைஞர் டிவி'யின் மூத்த செய்தியாளர் (மதுரை மாவட்டம்)
திரு.M.சுவாமிநாதன் அவர்களின் சகோதரரும்,
தந்தையார் திரு.A.முத்துராமலிங்கம் (அம்மா செக்யூரிட்டி மேன்பவர்சர்வீஸ்)
அவர்களின் இளைய மகனுமான,

திரு. M.ஆறுமுகம் (எ) குமார் Technical SI
முதுநிலை புகைப்பட நிபுணர் மாநகர் காவல்துறை மதுரை.

அவர்கள் 3.12.23 - ஞாயிறு அன்று காலை இறைவனடி சேர்ந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு:
குடும்பத்தினர்கள் & நண்பர்கள்

இல்லம்: 6/446-1, ஐலேண்ட் நகர் 4வது தெரு, ஆத்தி குளம், கே புதூர், மதுரை
Mob: 9786029311, 9842189932.






திருப்பூர் மாவட்டம், என்.காஞ்சிபுரம், கொடுவாய் எல்லப்பாளையம் புதூர் பிரிவில் நடைபெற்ற திருப்பூர் தெற்கு, வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்அவர்கள் சிறப்புரையாற்றினார். இதில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ், மாவட்டச் செயலாளர்கள் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ், கழக சுற்றுச் சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கு.சண்முகசுந்தரம் எம்.பி., மாநகரக் கழகச் செயலாளர் – மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், ஈ.தங்கராஜ், மு.ஜெயக்குமார், சு.முத்துக்குமார், எம்.எஸ்.ஆர்.ராஜ் (எ) மணிகண்டபிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மழை வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டார்!









கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கடந்த ஞாயிறு இரவு, தமது சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட லாயிட்ஸ் காலனி, வி.பி. ராமன் சாலை, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, ஜான் ஜானிகான் சாலை, சி.என்.கே. சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கொட்டுகிற மழையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, சாலையில் தேங்கியிருந்த மழைநீரை விரைந்து அகற்ற அதிகாரிகளை அறிவுறுத்தினார். மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் துபாய் விஜய், கமலா செழியன் எம்.சி. உள்ளிட்டோர் உடன் சென்றனர்.



# நெஞ்சுக்கு நீதி தரும் நம்பிக்கை!

■ நீரை.மகேந்திரன்

முத்தமிழறிஞர் கலைஞரை நெருங்கி வாசிக்கத் தொடங்கும் ஒரு மாணவனாக, கலைஞரின் எழுத்துகளில் எனக்கு மிக வியப்பான நூலாக ஆச்சரிய சுரங்கமாக உள்ளது 'நெஞ்சுக்கு நீதி'. ஆறு பாகங்களாக உள்ள இந்த நூலில் கிட்டத்தட்ட நான்காயிரம் பக்கங்களுக்கு மேல் தனது வாழ்க்கை வரலாற்றின் பல மேடுபள்ளங்களைத் தன் வாசகர்களுக்கு நெருக்கமாகப் பகிர்ந்து கொண்டிருக்கிறார் கலைஞர்.

தன் வரலாற்றை எழுதுவதில் எழுத்துச் செறிவும், காலத்தை நிலைநிறுத்தும் ஆளுமையும் ஒருங்கே கொண்டுள்ள எழுத்துகளாக கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' பக்கங்களைச் சொல்லலாம்.

தமிழ்நாட்டின் கடந்த அறுபது எழுபது ஆண்டுகால வரலாற்றையும், அவரது சொந்த வாழ்க்கையின் 90 ஆண்டுகளையும், திராவிட இயக்க அரசியலையும் திரும்பிப் பார்ப்பதற்கு மிகப்பெரிய ஆவணமாக உள்ளன அந்த எழுத்துகள்.

## தன் வரலாறு எழுதாத தலைவர்கள்

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் குறித்து, நமக்குக் கிடைக்கக்கூடிய வரலாறுகள் பிறர் சொல்லக் கேட்டு, பிறர் எழுதியவற்றைப் பிரதி எடுத்த தகவல்கள் கைமாறி கைமாறி உருகிய பனிக்கட்டியாகவோ, ஊதி அடைக்கப்பட்ட பலூனாகவோதான் நம் கைகளில் இப்போது வாசிக்கக் கிடைக்கின்றன.

தனக்குப் பிறகு தன் காலம் குறித்து, மக்கள் மத்தியில் என்னவாகப் பதிவு செய்யப்படும் என்பது குறித்த ஆர்வத்தைக் கொண்டிராததன் விளைவு இது எனலாம் . குறிப்பாக, பெருந்தலைவர் காமராஜர் காலத்தை நாம் அறிந்துகொள்வதற்கு முழுமுற்றாக இதுதான் ஆவணம் என்கிற நூலை சுட்ட முடியவில்லை.

பெரியார் காலத்தை அவரது அரசியல் களப்பணிகள் மூலம், நாம் ஒரு வடிவத்துக்குப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றினைத் தொகுத்து வைத்துள்ளோம். பெரியாரின் காலத்தை அவர் எழுதியதை விட, அந்த உழைப்பிலிருந்து மற்றவர்கள் உருவாக்கியவை அதிகம். ஆனால், பெரியாரின் மாணவனாக, தான் கடந்து வந்த பாதையைத் தானே எழுதிக் கொண்ட வரலாற்றாசிரியராகக் கலைஞரைப் பார்க்கலாம்.

## கழகமும் அரசும் எழுத்தும்

தன் வரலாற்றை வேறு யாரோ ஏன் எழுத வேண்டும் என்பதற்கு அவர் ஒரு விளக்கம் கொடுக்கிறார்.

"உன்னை ஒருவன் இழித்துப் பேசினான்' என்று தன் நண்பனிடம் ஒரு நண்பன் கூறினான். அதைக் கேட்ட அந்த நண்பன் வியப்புற்று, "அப்படியா இருக்காதே, என்னை அவன் இழித்துப் பேசியிருக்க மாட்டானே! நான் அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லையே! பிறகு எப்படி அவன் என்னை ஏசியிருக்க முடியும்" என்று கேட்டான். இந்த உரையாடல் துணுக்கில் இந்த உலகத்தின் படமே தெரிகிறது அல்லவா?

இத்தகைய உலகில்தான் நமது வாழ்க்கைப் பந்து உருளுகிறது. அந்தப் பந்தை நாம்தான் உதைத்து விளையாட வேண்டும். யாரோ உதைப்பார்கள் என்று சோம்பலாக இருந்தால் அவர்கள் நம்மையும் சேர்த்து உதைப்பார்கள்."

தனது வாழ்க்கை வரலாற்றுச் சித்திரத்தை எழுதத் தொடங்கும்போது அதற்கான விளக்கம் அளித்துள்ளார்.

கழகப் பணி, ஆட்சி நிர்வாகப் பணி இவற்றுக்கிடையில்தான் 'நெஞ்சுக்கு நீதி' சித்திரத்தையும் எழுதத் தொடங்குகிறார்.

ஏன் எழுதுகிறார்? எழுதுவதற்கு அவருக்கு நேரம் எங்கிருந்து கிடைக்கிறது என்பதைப் பற்றி இப்படிக் கூறுகிறார்:

"மன உளைச்சல்களை, அயர்வை, சோர்வை அனைத்தையும் போக்குகின்ற அருமருந்தாக அமைந்திருப்பதே எழுத்துப்பணிதான்" என்றும், தனது ஒரு நாளில் இரவுக்கு மேல் எழுத உட்காருவதை, "இரவு 10 மணிக்கு மேல் புகை வண்டியின் பெட்டிகளை மூடி விட்டு தூங்குவது போல ஒரு நடிப்பு. அதன் பிறகு பார்வையாளர்கள், முறையீடுகள் நிச்சயமாக இல்லை என்று நம்பலாம்" இப்படித்தான் அவருக்கு எழுதுவதற்கான நேரம் அமைகிறது.

## சின்னவர்களுக்கும் வரலாறு உண்டு

அவர் முதலமைச்சராக ஆன பின்னர்தான் வாழ்க்கை வரலாற்றுத் தொடரை எழுதத் தொடங்குகிறார். ஆனாலும், அவர், "வாழ்க்கை வரலாறு எழுதுகிற அளவுக்கு நீ என்ன அவ்வளவு பெரிய மனிதனாகி விட்டாயா" எனத் தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறார்.




"என் நெஞ்சே என்னைக் கேட்டது. அதற்குரிய பதிலையும் தன் கைவசம் வைத்துக் கொண்டிருந்தது. பெரிய மனிதர்களுக்குதான் வாழ்க்கையும் வரலாறும் சொந்தமா? சின்னவர்களுக்குக் கிடையாதா? என அப்போது கேள்வி கேட்டேன்" என்கிறார்.

அவர் தன்னைத்தானே சின்னவர் என்று குறிப்பிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர் எழுதிய அத்தனையும் நூற்றாண்டு ஆவணக் குறிப்பாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவரது வாழ்க்கையைச் சுருக்கியோ, நீட்டியோ யாரும் திரும்ப எழுதிவிட முடியாது. 'திருவாரூர் குளத்தில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன்' என்று கூறிய பத்து வயது சிறுவனைத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வர வேண்டுமெனில், அவர் எழுதி வைக்கவில்லை எனில் நமக்குக் கிடைத்திருக்காது.

> "எனக்குப் பிறகும் ஏன் இப்போதும் கூட இளைஞர் சமுதாயத்திற்கு இந்த எழுத்துக்கள் பயன்படும் என்பதால், என் எழுத்துக்களைத் தொடர்கிறேன்!"

திராவிட இயக்கத்திலும் கழகத்திலும் பல்வேறு போராட்டங்களின் போது சிறை சென்றவர்கள் பலர். முன்னணித் தலைவர்கள் எத்தனை நாட்கள் சிறையில் இருந்தார்கள் என்பதற்கான குறிப்புகள்கூட உறுதியான தகவல்களாகக் கிடைப்பதில்லை. ஆனால், கலைஞரின் சிறைப் போராட்டங்களும், சிறை நாட்களும் நாட்குறிப்புகளாக, நிகழ்வுக் குறிப்புகளாக நமக்குக் கிடைக்கின்றன.

## சமுதாயத்துக்குப் பயன்படும் சரிதம்

கலைஞரின் சுயசரிதையை வாசிக்கும் ஒருவர் அவற்றுள், ஒரு பின்னலைப் போலச் சொந்த வாழ்க்கையும், கழக வாழ்க்கையும், ஆட்சி நிர்வாகப் பணிகளும் இழையோடுவதைக் காணலாம். சொந்த வாழ்க்கையின் ஒவ்வொரு அசாதாரணச் சூழ்நிலைகளை அவர் எந்த அளவுக்கு எதிர்கொண்டார் என்பதை அவரது எழுத்துகள் கலங்க வைக்கின்றன.

1990-க்கு முன்னர் வரையிலான காலகட்டத்தில் கலைஞரின் வரலாற்றுக்கு அரசியல் அழகியல் (CLASSICAL) தன்மையை அறிய முடிகிறது . 90-க்குப் பிறகு அவரது தீவிரமான அனுபவத்துக்கு முன்னால், எதுவுமே இல்லாத அரசியல்வாதிகளுடன் அரசியல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு உருவாகிறது. அதனால் அவர் வரலாற்றுப் பக்கங்களில் அதிகபட்சமான அரசியல் பாடம் இடம் பெறுவதைக் காணலாம். குறிப்பாக, நாம் சமகாலத்தில் எதிர்கொள்ளும் முதிர்ச்சியற்ற அரசியல் பண்பாடுகளின் தோற்றுவாய்க் காலங்களாக அவற்றைக் குறிப்பிடலாம்.

'நெஞ்சுக்கு நீதி' 6 பாகங்களும் சேர்த்து கிட்டதட்ட நான்காயிரம் பக்கங்கள். இப்படியான ஒரு வாழ்க்கைச் சரித்திரம் எவரிடமும் கிடையாது. அவர் தன் வரலாற்றை எழுதி முடிக்கும் பொழுது கிட்டத்தட்ட 90 வயதுகளில் இருந்தார். 2013-ஆம் ஆண்டு 'நெஞ்சுக்கு நீதி' ஐந்தாம் பாகம் வெளியீடுகையில் தன் வரலாற்றை எழுதுவதற்கான அடிப்படைக் காரணமாகச் சொன்னது "எனக்குப் பிறகும் ஏன் இப்போதும் கூட இளைஞர் சமுதாயத்திற்கு இந்த எழுத்துக்கள் பயன்படும் என்பதால், என் எழுத்துக்களைத் தொடர்கிறேன்" என்றார். 'நெஞ்சுக்கு நீதி'யை வாசிப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ளலாம் என்கிற அந்த நம்பிக்கை நிச்சயம் துளிர்க்கும்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - 'தென்றல்'




கவியரசர் கண்ணதாசனை ஆசிரியராகக் கொண்டு 1954-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் 'தென்றல்' எனும் வார இதழ் வெளிவந்தது.

கவியரசர் திராவிட இயக்க ஆதரவாளராக இருந்த காலத்தில் வெளிவந்த இந்த இதழில் நாத்திகம், அரசியல் சார்ந்த படைப்புகள் வெளியாகியுள்ளன. மரபுக் கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த இது, தொடர்ச்சியாக வெண்பாப் போட்டிகளை நடத்தியது. அதில் கவிதை எழுதியவர்கள் பிற்காலத்தில் புகழ்பெற்ற கவிஞர்களாக விளங்கினர்.

கண்ணதாசன், பாரதிதாசன், தாம்பரம் எத்திராசன் ஆகியோர் இதழை மேற்பார்வையிட்டு நடத்தினர். 1955-ஆம் ஆண்டு மே 14 தேதியிட்ட இதழில் அவர்கள் மூவரும் வந்து இதழ்ப் பணியினைச் செய்ததற்கான புகைப்படம் வெளியாகியுள்ளது.

பாரதிதாசன், எஸ்.எஸ். தென்னரசு ஆகியோரின் படைப்புகளைத் தாங்கி வந்த இந்த இதழ், திராவிட முன்னேற்றக் கழக இதழாகவே அடையாளம் காணப்பட்டது. இதழின் தொடக்கக் காலத்திலேயே சுமார் 20 ஆயிரம் பிரதிகள் வரை விற்பனையாகி உள்ளதாகத் தகவல் இருக்கிறது. பொங்கல் சிறப்பு மலர்களையும் இது வெளியிட்டுள்ளது.

## :ப்ளாஷ்பேக்





இராஜேந்திரன்

### ஓய்வுநேரத்திலும் உழைப்பு!

நான் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறேன். 2002- ஆம் ஆண்டு தலைவர் கலைஞர், அவரது மகள் மு.க.செல்வி அவர்களின் இல்லத்துக்கு வருகை தந்திருந்தார். அவர்கள் வீட்டில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் எனக்குத் தெரிந்தவர்கள் என்பதால், அவர்களின் உதவியுடன் தலைவர் கலைஞரை நேரில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். என்னைப் பற்றியும், குடும்பத்தார் பற்றியும் கேட்டறிந்தார். ஓய்வெடுக்க வந்த இடத்தில்கூட அவர் ஓய்வெடுக்காமல் உழைத்த விதம், எங்களை எல்லாம் கவர்ந்தது.

**-எம்.இராஜேந்திரன்,**
**கிருஷ்ணகிரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### எதிர்ப்புக்குப் பிறகே திருமணம்!

**1948 செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் கலைஞருக்கு திருவாரூரில் திருமணம் நடைபெற்றது. அப்போதெல்லாம் அந்த நாள்தான் அண்ணா பிறந்தநாள் என்று யாருக்கும் தெரியாது. அன்றுதான் இந்தியை எதிர்த்து, நாடெங்கும் உள்ள பள்ளிகளின் முன்னே ஒரு நாள் 'அடையாள மறியல்' நடைபெற வேண்டும் என்று பெரியார் அறிக்கை விட்டிருந்தார். கலைஞரின் திருமணத்துக்கு நாள் குறித்து அழைப்பிதழ்களெல்லாம் அச்சான பிறகுதான், பெரியாரின் அறிக்கை வந்தது. இந்தித் திணிப்பு எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்ட பின்னர் தான் கலைஞர் திருமணப் பந்தலுக்குத் திரும்பினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 320




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131